இவ்வாறு எத்தனை நீண்ட வினைச் சொல்லையும், பெயர்ச் சொல்லையும் ஆராய்ந்து ஓரசையாக உள்ள அடிச்சொல் இன்னதெனக் காணலாம்.

"இந்த அடிச்சொற்களுள் பெயர்க்கு உரியவை என்றும், வினைக்கு உரியவை என்றும் தொடக்கத்தில் வேறுபாடு இருந்திருக்க முடியாது" (F. Max Mullar. The science of Language p.33). "பேசிய மக்களின் கருத்தில் பெயர் வினை என்ற பாகுபாடு சிறிதும் இல்லாதிருந்த ஒரு நிலையே மொழியின் தொடக்க நிலையாகும்" (Pillsbury and Meader – The psychology of Language p. 282). பல அடிச்சொற்களை ஆராய்ந்து காணின் இவ்வுண்மை புலனாகும்.

1. பூ, பூக்கள், பூவை, பூவிற்கு - பெயர்
2. பூ, பூத்து, பூத்தது - வினை
3. காய், காய்கள், காய்களை - பெயர்
4. காய், காய்த்து, காய்க்க, காய்த்தது - வினை
5. சொல், சொற்கள், சொல்லன் - பெயர்

6. சொல், சொல்லி, சொல்ல, சொல்லினான் - வினை

ஓரசையாகவுள்ள அடிச்சொற்கள் பல இவ்வாறு இருக்கக் காணலாம். (புறம் - குறள் - சான்று)ஈரசையாக உள்ளவற்றில் சில இவ்வாறு உள்ளன; பல பெயர், வினை என்னும் வேறுபாடு உணர்த்தி நிற்கின்றன.

பெயர் வினை வேறுபாடு அற்றவை:

மலர், மலரால், மலரை - பெயர்
மலர், மலர்ந்து, மலர்ந்த, மலந்தது - வினை
அடி, அடியால், அடிகள் - பெயர்
அடி, அடித்து, அடிக்க, அடித்தான் - வினை

பெயர் வினை வேறுபாடு பெற்றவை:

கடல், கடல்கள், கடலை, கடலுக்கு - பெயர்
மரம், மரங்கள், மரத்தை, மரத்தால் - பெயர்
நட, நடத்து, நடந்து, நடந்தான் - வினை
திற, திறந்து, திறக்க, திறந்தான் - வினை

இந்த அடிச்சொற்களும் இவ்வடிவங்களை அடைவதற்குமுன் பொதுவான ஓரசைச் சொற்களாக இருந்திருக்கும் எனக் கருதி, திராவிட மொழியின் அடிச் சொற்கள் பெயர், வினை இரண்டற்கும் பொதுவானவை என்று கொள்ள இடம் உண்டு (கால்டுவெல் - தி. மொ. ஒப் -193).

ஓரசையாக உள்ள அடிச்சொற்களை இரண்டு வகைப்படுத்தலாம்:

1. உயிரீறாக உள்ள அடிச்சொற்கள். உயிர் பெரும்பாலும் நெடிலாக இருக்கும். வா, போ, தா, ஈ
2. மெய்யீறாக உள்ள அடிச்சொற்கள். உயிர் பெரும்பாலும் குறிலாக

இருக்கும். நில், சொல், கொல், எண், உண்

ஒலித்தற்கு அரிய மெய்கள் ஈற்றில் நிற்றல் திராவிட மொழிகளின் ஒலியியலுக்கு மாறாகலின் அவை உகரத்தைத் துணையாக் கொண்டு நிற்கும். அவையும் இரண்டாம் வகையைச் சாரும். அவை *நகு, எடு, அறு முதலியன. வாழ், கேள், சாய், பார்* முதலியன சிறுபான்மை நெடிலடுத்து மெய்யீறாக வரும் அடிச்சொற்கள். வடமொழியில் ஒரு சில சொற்கள் தவிர, மற்றெல்லாச் சொற்களும் 'தாது' என்னும் வினையடியாகப் (verbal root) பிறப்பவை. திராவிட மொழிகளில் வினையடியாகப் பிறக்காத பெயர்ச்சொற்கள் பல உள்ளன (எ.கா. கால், வாய், செவி, நான், நீ, நீர், ஒளி, இருள்). பெரும்பாலும் பெயர்ச் சொற்களுக்கு வினையடி காண இயலும்.

	பெயர்		**வினையடி**	
1.	விரல்	-	விரி	(விரிதல்)
2.	கடல்	-	கட	(கடத்தல்)
3.	பகல்	-	பகு	(பகுத்தல்)
4.	குடல்	-	குடை	(குடைதல்)
5.	மரம்	-	மர	(மரத்துப்போதல் உணர்ச்சியறுதல்)

சில வினை வேர்கள் பெயராகும்போது அடையும் மாறுதல் மிகச் சிறிதேயாகும்.

வினையடி		**பெயர்**	**மாறுதல்**
கண்	-	கண்	உயிர்குறுகுதல்
நக்கு	-	நாக்கு	உயிர்நீளல்
மின்	-	மீன்	
வெல்	-	வேல்	
முகர்	-	மூக்கு	உயிர்நீளலும் பிறவும்
நில்	-	நிலம்	அம் சேர்தல்
உகு	-	உகிர்	இர் சேர்தல்
வில்	-	விலை	ஐ சேர்தல்
குதி	-	குதிரை	ர்+ஐ சேர்தல்

பெரும்பாலும் வினையடியிலிருந்து பெயர்கள் பிறத்தல் திராவிட மொழியில்பாக உள்ளது. ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளில் பெயர்ச் சொற்களில் இருந்தும் வினைச் சொற்கள் பிறக்கின்றன (to eye, to shoulder, to house). தமிழில் *முயல்* என்பது *முயற்சி* எனப் பெயராகி, பிறகு *முயற்சி* என்பது *முயற்சித்தான்* என வினையாக்கியுள்ளது என்ற கருத்து தவறு ஆகும். இம்முறை தமிழில் இல்லை. (இதனை Back-formation என்பர். - Bloomfield, Language – P.412)

அடிச்சொல்லோடு சேர்வன

அடிச்சொல் சிதையாவாறு ஒலித்துணையாகச் சேர்வன சில. அடிச்சொல்லின் பொதுவான பொருளைச் சிறப்பாக ஒன்றனுக்கு உரியதாக்கச் சேர்வன சில. திணை, பால், இடம் வேற்றுமை காலம் முதலான வேறுபாடுகளை உணர்த்தச் சேர்வன சில. இவ்வாறு அடிச் சொல்லோடு சேரும் உறுப்புக்களை மூவகைப்படுத்தலாம்" (குயிமொழியில் எந்த அடிச்சொல்லும் தனியே நின்று சொல்லாவது இல்லையாம் அது பெயராகவோ, வினையாகவோ அமையும் முன் ஓர் உறுப்பு சேர்க்கப்பட வேண்டும். அவ்வாறு சேர்க்கப்படும் உறுப்புகளை இந்த மூவகையாகவே பகுப்பர்) W.W.Winfield, A.Grammar of the Kui Language – p. 8)

1. ஒலித்துணையாவன: (Enunciative Additions)
2. பொருட் சிறப்புப் பயப்பன: [Formative Additions or Particles of specialisation]
3. இலக்கண வேறுபாடு உணர்த்துவன: [Grammatical Additions]

"பவணந்தியார் பகுபத இலக்கணம் வகுத்தோதி உறுப்புக்களைப் பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் எனக் குறித்துள்ளார்"

"பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியும் எப்பதக்களும்" (நன்னூல் - எழுத்து – 133)

பகுதி என்பது பெரும்பாலும் அடிச் சொல்லோடு ஒத்து வரும்; சிறுபான்மை வேறுபடும். பெருகிற்று என்பதில் பெருகு பகுதி என்பர். ஆனால் பெர் அல்லது பெரு என்றே

அடிச்சொல்லாகும். உண்டான் என்பதில் உண் என்பதே பகுதியும் அடிச்சொல்லாகும். பகுதியை முதனிலை என்பர். விகுதி என்பது திணை, பால் முதலியன உணர்த்தும் இறுதியுறுப்பாகும். இதனை இறுதி நிலை என்பர்; இது இலக்கண வேறுபாடு உணர்த்துவது.இடைநிலை என்பது பெயர்ச்சொல்லின் காலம் உணர்த்தாமல் நிற்கும் உறுப்பாகும். காலம் உணர்த்தாத பெயரிடை நிலையைப் பொருட்சிறப்புப் பயப்பது எனலாம். காலம் உணர்த்தும் வினையிடை நிலையை இலக்கண வேறுபாடு உணர்த்துவது எனலாம்.

வலைஞன் - ஞ் - பெயரிடைநிலை
செய்தான் - த் - வினையிடைநிலை

சாரியை, சந்தி, விகாரம் என்பவற்றை ஒலித்துணையாய் அமைவன எனலாம்.

1.ஒலித்துணையாவன: (Eaunciative additions)

அடிச் சொற்களோடு சேர்ந்து அவற்றை ஒலித்தற்கு எளியனவாக மாற்றும். பொருட்பைச் சிறப்பித்தலோ வேறுபடுத்தலோ இவற்றால் இயலாது. பெரும்பாலும் உயிர்கள் இவ்வாறு ஒலித்துணையாகம். இவற்றுள்ளும் உலகரமே பயின்று வருவது. மற்ற உறுப்புகள் வந்து சேரும்போது கெடுதலும் உண்டு.

சான்று:
ஆடு – உகரம் ஒலித்துணையானது.
ஆடு + ஐ – ஆட்டை
ஆடு + இன் + ஆன் - ஆடினான்
எடு – உகரம் ஒலித்துணையானது
எடுத்தான் - உகரம் கெடவில்லை
எடு + ஐ - எடை - உகரம் கெட்டது.

கன்னடத்திலும் தெலுங்கிலும் உகரம் ஒலித்துணையாக வருதல் மிகுதி. மெய்யீற்றுத் தமிழ்ச் சொல்கள் பல இம் மொழிகளில் உகரம் பெற்று ஒலிக்கும். தமிழில் கண், மண் என்பன இம்மொழிகளில் கண்ணு, மண்ணு என உகரம் பெறும். தமிழில் அகர ஈறாக உள்ள 'சில'

என்னும் சொல்லும் கன்னடத்தில் உகரம் பெற்றுச் 'செலவு' என நிற்கும். ஆகவே, திராவிட மொழிகளில் ஒலித்துணையாக வருவனவற்றுள் உகரம் முதலிடம் பெறுவதாகும். அ, அன், இன் முதலியன இவ்வாறு ஒலித்துணையாகும்.

நாம் + கு – நமக்கு – அ
அது + ஐ – அதனை – அன்
வீடு + கு - வீட்டிற்கு – இன்

2. பொருட் சிறப்புப் பயப்பன

சில அடிச் சொற்கள் பொதுவான கருத்தை உணர்த்தி நிற்க, அவற்றோடு சேரும். *கு, பு* முதலான உறப்புக்கள் பொதுக் கருத்தை வெவ்வேறாக மாற்றிப் பல்வேறு பொருள் உணர்த்தச் செய்கின்றன.

படு < படகு கீழ் < கிழக்கு கரு < கருக்கு கொடு < கொடுக்கு	கு
கால்< காம்பு நிர < நிரம்பு, நிரப்பு இரு < இரும்பு பாய் < பாம்பு	பு

இவற்றுள் *படு* முதலியன பொதுக்கருத்து உணர்த்தும் அடிச் சொற்கள். *கு, பு* ஆகியவை பொருட் சிறப்பு உணர்த்தச் சேர்ந்தவை. *'அட்'* (அடு) என்பது ஓர் அடிச் சொல். அதன் பொதுக் கருத்து *சேர்தல், நெருங்குதல்* என்பன போன்றது எனலாம். அச்சொல்லை வெவ்வேறான சிறப்புப் பொருளுக்குப் பயன்படுத்தப் பல்வகை உறுப்புக்கள் சேர்ந்துள்ளமை.

அட் (அடு) = பொதுவான அடிச்சொல்

அடங்கு – அ+கு – மூக்கொலி பெற்றுச் சேர்ந்தது

அடக்கு – அ+கு – வல்லொளயாய் இரட்டித்தது

அடை – ஐ – சேர்ந்தது

அடர் - அர் சேர்ந்தது

அடுக்கு – கு சேர்ந்தது

அண்டு - இடையே மூக்கொலி சேர்ந்தது.

இவ்வாறே *அண்* என்னும் அடிச்சொல் வேறுபடுமாறு:

அண் - பொதுச் சொல்

அணு – உ

அணுகு – உ+கு

அணி – இ

நட என்னும் பொதுக் கருத்து உடைய அடிச்சொல் வேறுபடுமாறு:

நட – பொது

நடை – ஐ

நடத்தல் - த்+அல்

நடத்தை – த்+ஐ

உடு என்னும் பொதுக் கருத்து உடைய அடிச்சொல் வேறுபடுமாறு:

உடு – பொது

உடை – ஐ

உடுத்தல் - த்+அல்

உடுப்பு - பு

உடுக்கை – க்+ஐ

உடல் - அல்

உடம்பு - அம்+பு

எல்லாத் திராவிட மொழிகளிலும் இத்தைகைய அடிச்சொற்களும் அவற்றின் பல்வேறு வடிவங்களும் காணப்படினும், இலக்கிய வளமும், தொன்மையும் மிக்க தமிழ் மொழியில்தான், அவை இன்றும் கணக் கற்றவையாகப் பெருகி வழங்குகின்றன.

3. இலக்கண வேறுபாடு உணர்த்துவன

பெயர்ச் சொற்களில் *அன், ஆன்* முதலியவை திணைபால் முதலியன உணர்த்தச் சேர்வன ஆகும். வினைச்சொற்களில் இடைநிலை விகுதி முதலியவை காலவேறுபாடுகளும் பிறவினை முதலிய வேறுபாடுகளும் உணர்த்தச் சேர்வன. வினைமுற்றுக்களில் திணை, பால் உணர்த்தும் விகுதிகளும் சேரும்.

நல்லை – ஐ முன்னிலை ஒருமை உணர்த்திற்று
நல்லன் - அன் படர்க்கை உயர்திணை ஆண்பால் உணர்த்திற்று.
எழுப்பு - பு பிறவினை

இவ்வாறு இலக்கண வேறுபாடு உணர்த்தும் உறுப்புக்கள் சேரும்போது அடிச்சொல் சிதையாமல் வேறுபடாமல் இருத்தலே திராவிடமொழியன் இயல்பு ஆகும். ஆயின் சில சொற்களில் சிறிதளவு வேறுபடுதலும் உண்டு. அவ்வேறுபாடு உயிர் நீளம், அல்லது குறுகல் என்னும் அவ்வளவே நிகழும்.

நாம் - நமது
வே – வெந்து
நோ – நொந்து
காண் - கண்டு

இவ்வியல்புக்கு மாறாகப் வேறுபடும் அடிச் சொற்களும் சில உள. அவை ஏனைய மொழிகளில் உள்ளவற்றை நோக்க மிகச் சிலவேயாகும்.

யான் - என் யகரமும் எகரமும் பிறர்பால்
யாம் - எம் உறவுடையன

நீ – நின், உன்

நீர் - நும், உம்

சா – செத்து – சகரம் மொழி முதலாக எழுத்து, ஒலித்தற்கு எளிதாக்க அகரத்தை எகரமாக்கினர் எனலாம். *வார் வந்து, வா* என்னும் சொற்களில் ரகரம் கெடினும் *வர் வருக, வருவார், வருதல்* என்னம் மற்றச் சொற்களில் ரகரம் கெடவில்லை. தெலுங்கில் 'ரா' என்பதே ஏவல் ஒருமை. அது 'வீரா' என்று திரிந்த திரிபைக் காட்டுவது. கன்னடத்தில் 'பார்' என்பதே ஏவல் ஒருமை. அது 'வார்' என்பதன் பழமையைக் காட்டுகின்றது. *தார், தந்து, தா* முதலான சொற்களில் ரகரம் கெடினும் *தரல், தருக, தருவார்* முதலான சொற்களில் கெடவில்லை.

துணையுறுப்புகளின்தோற்றம்

பொருட் சிறப்புப் பயக்கும் உறுப்புக்களும் இலக்கண வேறுபாடு உணர்த்தும் உறுப்புகளும் தொடக்கத்தில் அடிச் சொற்களாகவே இருந்தவைகள். தனித்து நின்று பொருள் உணர்த்தும் தன்மை பெற்று வழங்கியவைகளே. வேறு அடிச் சொற்களோடு சேர்ந்து பொருள் உணர்த்தப் பயன்பட்டபோது, அவற்றிற்குத் துணையான உறுப்புக்களாக மாறிவிட்டன; தமக்கென்று இருந்த பொருளை இழந்து விட்டன. தனித்து நின்று பொருள் உணர்த்தும் சொற்களை உரிமைச் சொற்கள் (free forms) என்றும், மற்றத் துணையுறுப்புகளை உறுப்புச் சொற்கள் (bound forms) என்றும் குறிப்பிடுதல் உண்டு. (Bloomfield, Language p. 160)

சீன மொழியில் இத்தகைய சொற்களை (துணையுறுப்புக்களை) வெறுஞ்சொற்கள் (empty words) என்றும் பொருளுடைய சொற்களை நிறை சொற்கள் (full words) என்றும் பாகுபாடு செய்துள்ளனர். தொடக்கத்தில் எல்லாம் நிறைசொற்களாக இருந்தவைகளே; அவற்றுள் சில மற்றவற்றிற்க்குத் துணையாய்ப் பொருட்சிறப்பு உணர்த்தவும் இலக்கண வேறுபாடு உணர்த்தவும் முன்வரும்போது, அவற்றின் தனிவாழ்வு அழிகின்றது. நிறைசொற்களாக இருந்த அவை வெறுஞ்சொற்களாக மாறுகின்றன (J .Vendryes, Language – pp 164–165). *ஐ, ஆல், கு, இன்* முதலான உருபுகள் இவ்வாறு வெறுஞ்சொற்களாக மாறி இலக்கண வேறுபாடு உணர்த்தப் பயன்படுகின்றன. *மெய்* என்பது *வடிவு, உடம்பு* என்னும் பொருள்தரும் ஓர் அடிச் சொல். அது *கரு* என்னும் வேறு அடிச் சொல்லோடு சேர்ந்த போது *கரு மெய்* என்று ஆயிற்று. *செம்மெய்* வேண்டிய முதலான சொற்களும் ஆயின. நாளடைவில் *கரு, வெண்* முதலான முதற் சொல்லின்

பொருள் சிறந்து நிற்க, *மெய்* என்னும் இரண்டாம் சொல்லின் பொருள் சிறப்பிழந்து நலிந்தது. அது நன்கு ஒலிக்கப்படுத்தலும் குறைந்தது. *மெய்* என்பது *மை* என ஒலிக்கப்படுதலும் குறைந்தது. *மெய்* என்பது *மை* என ஒலிக்கப்படலாயிற்று. சிறப்புக் குறையக்குறைய, ஒலியில் தெளிவும் குறையும் *கரு/மை, செம்/மை, வெ/ண்/மை* எனச் சொற்கள் மாறின. பிறகு மை என்பது துணையுறுப்பாகி (வெறுஞ்சொல்லான விகுதியாகி) *நன்மை, தீமை* முதலான பல சொற்களுக்கும் பயன்பட்டது. *பொய்ம்மை, பொம்மை* என்ற சொற்கள் அமைந்த அமைப்பு எண்ணி வியத்தற்குரியதாக உள்ளது. மெய் என்ற சொல்லுக்கும் *மை* என்பது துணையுறுப்பாகப் பயன்படும் நிலைமை நேர்ந்து, *மெய்மை* என்ற சொல் அமைந்தது. பொதுவாக *உலோகம்* என்ற பொருள் உணர்த்திய *பொன்* என்னும் அடிச்சொல்லும் இவ்வாறு துணையுறுப்பாகப் பயன்பட்டு வடிவு சிதையலாயிற்று. *இரும்பொன், செம்பொன்* முதலான சொற்கள் *இரும்பு, செம்பு* எனத் திரிந்தமை எனலாம்.

இவற்றில் உள்ள '*ப*' என்னும் துணையுறுப்பு ஒரு காலத்தில் தனிப் பொருள் உடைய அடிச் சொல்லாய் வழங்கியது என்பது இதனால் தெளிவாகின்றது. *தல், அல், அம், ஐ, கை* முதலான தொழிற் பெயர் விகுதிகளை ஆராய முடிந்தால், இவ்வுண்மையே புலனாகும். பல துணையுறுப்புகள் இன்று ஆராய்ச்சிக்கு எட்டாதவைகளாய் நிற்கின்றன. *மை, ப* முதலானவற்றால் தெளிந்த உண்மையே இவற்றிற்கும் பொருந்தும் எனக்கொள்ளலாம். நிறைசொல்லான அடிச்சொல் வெறுஞ்சொல்லான துணையுறுப்பாக மாறியபோது, தன் பொருளை இழந்ததாகக் கூறப்பட்டது. தன் பொருளை இழந்தது என்று கூறவதை விட, பருப்பொருளை உணர்த்திய நிலையிலிருந்து நுண் பொருளை உணர்த்தும் நிலைக்கு மாறியது என்று கூறுவதே பொருந்தும் என்கிறார் அறிஞர் வெண்ட்ரியே (Language pp 168, 169) மெய் என்பதற்கு உடம்பு, வடிவம் என்னும் பருப்பொருள் இருந்தது போய், *மை* விகுதியாக அமைந்தபோது பண்பு தன்மை என்னும் நுண்பொருள் பெற்றமை காணலாம். துணையுறுப்புக்களாக இன்று வழங்கும் விகுதி முதலியவை எல்லாம் அடிச்சொற்களாக இருந்தவைகளே எனக் கொள்ளலாகது என்கிறார் அறிஞர் யெஸ்பர்ஸன். தமிழில் உள்ள பிறவினை விகுதிகளாகிய *வி, பி* என்பவைகளையும். நிகழ்கால இடைநிலைகளாகிய கிறு கின்று ஆ நின்று என்பவைகளையும் ஆராய்ந்தால், இது விளங்குகிறது.

துணையுறுப்புகளாக இன்று வழங்கும் விகுதி முதலியவை எல்லாம் அடிச்சொற்களாக இருந்தவைகளே எனக்கொள்ளலாகாது என்கிறார் அறிஞர் யெஸ்பர்ஸன். அவற்றுள் பல தவறுபடச் சொற்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை என்பது அவர் கருத்து. தமிழில் உள்ள

பிறவினை விகுதிகளான வி, பி என்பவைகளையும், நிகழ்கால இடைநிலைகளாகிய கிறு, கின்று, ஆநின்று என்பவைகளையும் ஆராய்ந்தால் இது விளங்கும். *வி, பி* என்பவற்றில் *இ* என்பதே பிறவினைப் பொருளை உணர்ந்த வருவது. வகர, பகர மெய்கள் சொற்களின் இடையே வந்த மெய்கள். *கிறு, கின்று, ஆநின்று* என்பவற்றில் *கு* என்பது சாரியை, *இன்று* என்பதும் அதன் திரிபாகிய *இறு* என்பதுமே காலஇடைநிலையாகக் கொள்ளத்தக்கவை. ஆநின்று என்பதில் *ஆ* என்பது வினையெச்ச விகுதியாகும்; *நின்று* என்பது துணைவினையாக வந்ததாகும். ஆதலின் துணையுறுப்புக்களாக உள்ளவை எல்லாம் அடிச்சொற்கள் என்றோ அவற்றின் திரிபுகள் என்றோ கொள்வதற்கில்லை. இவ்வாறு தவறு படப்பிரிப்பதால் அமைந்தவை பலஉண்டு. ஆயின் இத்தகைய தவறுகள் இயல்பாக அமைந்து மொழிக்குப் பயன்படுகின்றன.

பேசும் மக்களின் மனம் சொற்கள் நாடி அலையும்போது, கிடைத்ததைப் பயன்படுத்திக் கொண்டு கருத்தை உணர்ந்த விரைகின்றது. அந்நிலையில் ஒருமுறை இருமுறை துணையுறுப்பாக ஒன்றைப் பயன்படுத்திய பிறகு, அதை இயல்பானதாகக்கொண்டு பலசொற்களுடனும் சேர்ந்துக் கருத்து நுட்பங்களை மக்கள் உணர்த்துகின்றனர்.

வருவி என்பதில் *'வி'* என்பதைப் பிறவினைப் பொருளுக்குப் பயன்படுத்தி வெற்றி கண்ட பிறகு, *செய்வி, சொல்லி, ஆக்குவி, போக்குவி* முதலான பல சொற்களுக்கும் அதையே பயன்படுத்தினர். *ஆகின்றது, போகிறது* முதலான சொற்களில் *கின்று, கிறு* என்னும் துணையுறுப்புக்களைப் பயன்படுத்தி வெற்றி கண்ட பிறகு, *நடக்கின்றது. செய்கிறது* முதலான நூற்றுக்கணக்கான சொற்களில் அவற்றைப் பயன்படுத்தினர். பலவகைக் கருத்துக்களை வளர்த்துப் பெருக்கு. அவற்றை உணர்த்தப் பலவகைச் சொற்களைத் தேடி அலையும் மக்களின் மனம், கிடைத்த எந்தத் துணையுறுப்பையும் கருவியாகக் கொண்டு பயன்படுத்திக் கொள்கின்றது. அந்தத் துணையுறுப்பின் தோற்றம், வரலாறு, வடிவு முதலியவற்றைப் பற்றிக் கவலைப்படுவதில்லை; அடிச் சொல்லோடு அதைச் சேர்க்கும் முறையை மட்டும் ஒழுங்கு படுத்திக் கொள்கிறது.

4.2 வ.சுப. மாணிக்கத்தின் ஆய்வு

வ.சுப. மாணிக்கம் வினையடிகள் குறித்து “A Study of Tamil Verbs” என்ற நூலில் கூறிய செய்திகள் இங்குத் தரப்படுகின்றன.

1. வினை வடிவம் (the verbal form)

இங்கு தமிழ் இலக்கணத்தார்களால் வினைவடிவுகள் பற்றிக் கூறப்பட்ட கருத்துகளை ஆயவும் தமிழ் வினைக்குப் பெயரிடப்பட்டுள்ள 'வினை' என்பதன் மூலமும் பொருளும் என்ன என்பதுடன் அதன் இயல்பு எவ்வாறு பெயர்ச்சொல், இடைச்சொல் மற்றும் உரிச்சொல் என்பனவற்றிலிருந்து வேறுபடுகின்றது என்று நிறுவவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியரின் கருத்து

பண்டைய தமிழ் இலக்கணத்தார் பெயரையும் வினையையும் மட்டுமே தமிழின் சொல்வகைப்பாடுகளாகத் தருகின்றனர். அவர்கள் 'இடைச்சொல்' மற்றும் 'உரிச்சொல்' என்பவைகளைச் சொல்வகைப்பாடுகளாகக் கருதவில்லை. அவர்கள் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் சுதந்திரமான வகைப்பாடுகள் அல்ல மற்றும் அவை தமது வெளிப்பாட்டிற்குப் பெயரையும் வினையையும் சார்ந்திருக்கின்றன என்பதன் அடிப்படையில் அந்த ஏற்பை அவர்கள் தர்க்கரீதியாக எதிர்த்தார்கள் என்றும் தோன்றுகின்றது. பின்வரும் சூத்திரத்தை ஆய்கையில் இக்கூற்றுத்தான் பிறக்கும்.

"சொல் எனப் படுப பெயரே வினை என்று
ஆயிரண்டு என்ப அறிந்திசி னோரே." (தொல். 642)

"இடைச் சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கின் தோன்றுமே என்ப." (தொல். 643)

பெயருக்கும் வினைக்கும் என ஒன்றும் இடைச்சொல்லுக்கும் உரிச்சொல்லுக்கும் என ஒன்றும் வரும் இரண்டு சூத்திரங்களின் இணைப்பு உருவாக்கம் தமிழுக்கு நான்கு வகைப்பாடுகளைத் தருவதில் உள்ள விருப்பமின்மை வெளிப்படுத்துவதுடன் பெயர் மற்றும் வினை என்பவைகளின் முதன்மையான மற்றும் சுதந்திரமான நிலையையும் உரிச்சொல் மற்றும் இடைச்சொல் என்பவைகளின் இரண்டாவது நிலையையும் சார்வையும் நியாயம் செய்கின்றது.

இது முதன்மை ஒலிகள் மற்றும் முதன்மை சொற்கள் பற்றிய கூற்றுக்குத் தொல்காப்பியரின் அணுகுமுறையுடன் நெருங்கிய ஒப்புமை கொண்டுள்ளது.

"எழுத்து எனப்படுப,
அகர முதல்,
நகர இறுவாஇ முப்பது என்ப" (தொல். 1)

"சொல் எனப்படுப ... ஆயிரண்டு என்ப (தொல் 642)

இங்கு பெயர் மற்றும் வினை என்பதன் வலியுறுத்தல் முப்பது ஒலிகளின் வலியுறுத்தலுடன் ஒத்திருக்கின்றது. இரண்டாம் ஒலிகள் மற்றும் இரண்டாம் சொற்களைப் பற்றிய கூற்றுக்குத் தொல்காப்பியரின் அணுகுமுறையில் இது போன்ற ஒப்புமையை உணரலாம்.

"சார்ந்து வரல் மரபின் முன்று அலங்கடையே" (தொல். 1)

"இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கின் தோன்றும் என்ப" (தொல். 643)

இதிலிருந்து தொல்காப்பியரும் அவருக்கு முந்தியவர்களும் பெரையும் வினையையும் சுதந்திர நிலையைக் கொண்டிருக்கும் இரண்டு சொல்வகைப்பாடுகளாகக் கருதினர் என்று தெரிகின்றது. இதன் தொடர்பாக, வெண்டிரையின் கருத்து தொல்காப்பியர் கொள்ளும் கருத்தை ஆதரிப்பதாகத் தெரிகின்றது. "நீக்கல் செயல்பாட்டைத் தொடரும்போது நாம் பெயர், வினை என்ற இரு சொல்வகைப்பாட்டை விட்டு விட்டுத் தான் முடிவுக்குவரவேண்டியிருக்கின்றது. பிற சொல்வகைப்பாடுகள் இவ்வடிப்படையான வகுப்புகளுக்குள் தான் வருகின்றன" (Vendryes, Language, p117).

பிற்கால இலக்கணத்தாரின் கருத்துக்கள்

சிவஞானமுனிவர் அவர்தம் 'சூத்திரவிருத்தி' என்ற நூலில் *நட, வா* போன்ற எல்லா வினை வேர்களும் இயற்கையாகவே உரிச்சொற்களாகும்; அவை செயலைக் குறிபிடப்

பயன்படுத்தப் படுகையில் தான் வினையாக மாறுகின்றன என்று கூறகிறார். அவரது விளக்கப்படி உரிச்சொல் இரு வகையான பண்புகளைக் கையாளுகின்றன; அவை அருவ குணங்கள் மற்றும் செயற்பாட்டின் பண்புகள் (சூத்திர விருத்தி ப.47) என்பனவாகும். இவ்வறிஞர் தமது முந்தைய கருத்துக்கு மாறாக நன்நூல் சூத்திரம் 137-ஐப் பற்றிய தமது உரையில் எல்லா வினைகளும் பெயர்களாகக் (தனி வினைப்பெயர்களாக) கருதப்பட வேண்டும் என்கிறார்.

பிரயோக விவேகம் என்ற நூலின் ஆசிரியரான சுப்பிரமணிய தீட்சிதர் சில தொல்காப்பியச் சூத்திரங்களைத் தவறாகப் பொருள்கொண்டு தமிழில் ஒரே ஒரு சொல்வகைப்பாடு தான் உள்ளது; அது உரிச்சொல் தான் என்கின்றார். தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் உரையாசிரியர்களில் ஒருவரான தெய்வச்சிலையார் தமிழில் உரிச்சொல்லால் வெளிப்படுத்தப்படுவது சமஸ்கிருதத்தில் 'தாது' என்ற சொல்லால் குறிபிடப்படுவதற்குச் சமமானது என்கின்றார்; இதன்படி இவர் எல்லா வேர்களும், அவை பெயர்சார்ந்தாக இருந்தாலும் வினைசார்ந்தாக இருந்தாலும் சரி, உரிச்சொல்லைச் சாரும் என்று கருத்துரைக்கிறார். அவர் தன்னுடைய கருத்துக்குச் சான்றாகத் தொல்காப்பியச் சூத்திரம் 482-இல் காணப்படும் 'குறைச்சொற்கிளவி' என்பதை எடுத்துக்காட்டுகின்றார். டாக்டர் பி.எஸ். சாஸ்திரி, "இதுவும் எழுத்ததிகாரத்தில் இறுதிக்கு முந்திய சூத்திரத்தில் குறிப்பிடப்படும் குறைச்சொற்கிளவி என்ற சொல்லும், உரிச்சொல் என்பது பெயர்களின் அல்லது வினைகளின் வேர்களாகும் என்று தெளிவாகக் கருத்துரைக்கின்றன. இதைத் தெய்வச்சிலையார் கூறுவது போல் சமஸ்கிருதத்தின் 'தாது' என்பதற்குச் சமமானது என்று எடுத்துக்கொள்ள இயலாது; ஏனென்றால் சமஸ்கிருத இலக்கணத்தார்களின் கருத்துப்படி ஒரு தாது என்பது வினை வேராகும்; மற்றும் தொல்காப்பியர் தமது நூலில் எல்லாப் பெயர்களும் வினை வேர்களிலிருந்து உருவாக்கப்பட்டவை என்ற எங்கும் குறிப்பிடவில்லை." (Sastri, 200). சாஸ்திரி தெய்வச்சிலையாரால் செய்யப்பட்ட ஒப்பீட்டின் குறைபாட்டைச் சரியாகக் கூறினாலும் அவர் உரிச்சொல்லின் இயல்பு பற்றிய தெய்வச்சிலையாரின் கருத்துடன், அதாவது உரிச்சொல் பெயர் மற்றும் வினை வேர்களை உள்ளடக்கியது என்பதுடன் முழுவதுமாக உடன்படுகின்றார்.

பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்திற்குப் பிற்பட்ட எல்லாப் பிற்கால இலக்கணத்தார்களும் உரையாசிரியர்களும் தேவையற்ற விளக்கங்களில் வேறுபட்டாலும், உரிச்சொல் வேர்களை உள்ளடக்கியது மற்றும் பெயர்களும் வினைகளும் அதிலிருந்து

ஆக்கத்தக்கன என்ற விசயத்தில் உடன்படுகின்றனர். எம். சீனிவாச ஐயங்காரால் எழுதப்பட்ட 'Tamil Studies' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட செய்திகள் உரிச்சொல்லின் உண்மையான பொருளைப் புரிந்துகொள்வதில் அவர்களின் தோல்விக்கான காரணத்தைக் காட்டும்: "பெரும்பாலோனோர் தமிழும் சமஸ்கிருதமும் அறிந்தவர்கள்; இருப்பினும் அவர்களுக்குப் பிந்தையதுடன் கூடுதல் அன்பும் மரியாதையும் இருந்தது. நேமிநாதம், வீரசோழியம் இவற்றின் ஆசிரியர்களும் தொல்காப்பியம், குறள் இவற்றின் உரையாசிரியர்களும் மேற்சொன்ன கருத்துக்கு ஆதரவுகாட்டுகின்றனர். மீண்டும் 18-ஆம் நூற்றாண்டில் நல்ல சமஸ்கிருத அறிஞர்களாக இருந்த இலக்கணக்கொத்து, பிரயோக விவேகம் என்பதன் ஆசிரியர்கள் ஒரு பொதுவான இலக்கணத்தைக் கொண்டு தமிழ் சமஸ்கிருதத்தின் கிளைமொழியாகும் என்று உறுதியாகக் கூறினர்." (எம். சீனிவாச ஐயங்கார், 152)

உரிச்சொல்லின் உண்மையான முக்கியத்துவம்

தொல்காப்பியர் "உரிச்சொல் கிளவியும் அவற்றுவழி மருங்கின் தோன்றும் என்ப" (643) என்ற வரியில் உரிச்சொல்லின் இயல்பு பற்றிய அவருடைய மற்றும் அவருக்கு முந்தியவர்களின் கருத்தைத் தெளிவாகக் சுட்டிக்காட்டுகின்றார். அவர் மீண்டும் 'பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' (781) என்ற வரியில் *அவற்றுவழி* 'அவற்றின் பக்கம்' என்பதால் அவர் எதைக் கூறுகின்றார் என்பதற்குத் தெளிவான விளக்கம் தருகின்றார். உரிச்சொல் என்பது இடைச்சொல் போன்று சுதந்திரமற்றது மற்றும் அது பெயரையோ வினையையோ சாரும். அச்சொற்கள் செய்யுளுக்கு மட்டும் உரியது அல்லது பெயர்ச்சொல் மற்றும் வினைச்சொல் இவற்றிலிருந்து சுதந்திரமானது உரிச்சொல் எனக் குறிப்பிடப்படுகின்றது என்பதைத் தவறெனக் காட்டவியலும். தமிழில் செய்யுளுக்கென்று மட்டும் எந்தச் சொல்லும் தனியாக விலக்கிவைக்கப்படுவதில்லை. தமிழ்ப்பொழிலில் வெளியிடப்பட்ட 'வழக்கும் செய்யுளும்' என்ற வ.சு. மாணிக்கத்தின் கட்டுரையில் அவர் இப்பொழுதும் நாள்தோறும் பயன்படுத்தப்படும் ஆனால் அறிஞர்களால் திரிசொல் என்ற வகைப்பாட்டைச் சார்ந்தது எனக் கருதப்பட்ட குறிப்பிடத் தகுந்த எண்ணிக்கையிலான சொற்களைக் குறிப்பிட்டுத் திரிசொல் என்பதன் பொதுவான கருத்தின் வெறுமையை வெளிப்படுத்த முயற்சித்துள்ளார்.

'உரிமை' என்ற சொல் எல்லாக் காலங்களிலும் 'சரியானது' என்றுதான் பொருள்படும் 'சுதந்திரமானது' என்று பொருள்படாது. நாம் இச்சொல் பழைய இலக்கியங்களில் எல்லாம் இப்பொருளை வெளிப்படுத்தும் என்று காண்கிறோம்.

"உயர்திணைக்கு உரிமையும் அ.·.றிணைக்கு உரிமையும் (தொல். 644)

'உரிமை உடைத்து இவ்வுலகு' (குறள் 578)

அக இலக்கியங்களில் கூறப்படும் விசயம் மனிதவினத்திற்கு மட்டும் தான் பொருந்தும் என்று 'உரிச்சொல்' என்பதால் நாம் புரிந்துகொள்கின்றோம்.

தொல்காப்பியத்தில் 'உரிச்சொல்' என்று கணக்கிடப்பட்டுள்ள 120 சொற்களும் அவை பெயருக்கோ வினைக்கோ வரும் அடிப்படை வேர்கள் என்பதை சிறிதளவும் உணர்த்தவில்லை. இச்சொற்களின் கவனமான ஆய்வுக்குப் பின்னர் யாரும் உரிச்சொல் வடிவம் அடிப்படையிலோ பொருண்மை அடிப்படையிலோ குறைபாடு உள்ளது என்று யாரும் கூறுவதில்லை. உரிச்சொல் என்பதைக் 'குறைச்சொல்கிளவி' (482) என்று தொல்காப்பியர் கருதுவது உண்மையாகும். பின்னர் வரும் வெளிப்பாடு உரிச்சொல் என்பது சில குறைகள் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இக்குறைபாடு எது? உரிச்சொல் என்பதன் வரையறை விளக்கத்தில் குறை கூறப்படுகின்றது. சுத்தமான பெயர் எல்லா நேர்வுகளிலும் பெயர்த்திரிபாக்கம் பெறுவது போன்று திரிபாக்கம் பெறாத மற்றும் சுத்தமான வினையைப் பண்பாக்கம் செய்கின்ற ஏவலாகப் பயன்படுத்தப்படாத ஆனால் சில இடங்களில் பெயர்த்திரிபாக்கமோ வினைத்திரிபாக்கமோ பெற்று வரவியலும் உரிச்சொல் தனியான அலகாகக் கருதப்படுகின்றது. இருப்பினும் உரிச்சொல் என்ற கலைச்சொல் உணர்த்துவதுபோல் அது பயன்படுத்தப்படும் சூழல் அடிப்படையில் அது பெயரையோ வினையையோ சாரும். இம்மாதிரியான உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்பவைகளிலிருந்து வந்ததாகத் தெரிகின்றது. இம்மாதிரியான பொருண்மை குறைச்சொல் கிளவி என்ற சொல்லால் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது பின்வரும் வரியிலிருந்து எடுத்துக்காட்டப்படுகின்றது.

"பெயரினும் வினையினும் மெய் தடுமாறி" (தொல். 781)

எனவே, உரிச்சொல் என்பது பெயரின் அல்லது வினையின் அடிப்படைப் பகுதியல்ல; ஆனால் அதன் குறைபாடுள்ள இயல்பாகும். வினையின் வரையறை விளக்கத்தின் முழு பயன்பாட்டைக் கொண்ட *நட, வா* போன்ற சொற்களை எந்த விதத்திலும் உரிச்சொல்லாக வகைப்படுத்வியலாது; அவை சுத்தமான வினை வடிவங்களாகும். உரிச்சொல் எல்லாப் பெயர் மற்றும்

வினையின் வேர்களைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிட்ட இலக்கணவியலார்கள் அவர்களின் இந்தக் கூற்று சொற்களை முதன்மையாக பெயர் மற்றும் வினை என்று பகுப்பதை தேவையற்றதாகவும் பயனற்றதாகவும் செய்கிறது என்பதை உணரத் தவறிவிட்டனர். அரசன் சண்முனார் தம்முடைய பாயிர விருத்தியில் பிற்கால இலக்கணவியலாரின் தவறான கோட்பாட்டை கண்டனம் செய்கின்றார்.

வினையின் தனித்தன்மையான இயல்பு

மற்றொரு முரண்பாடான விசயம் இப்பகுதியில் வாதிட வேண்டியதாகும். இளம்பூரணரும் சேனாவரையரும் 'வினை எனப்படுவது' (தொல். 682) என்ற சூத்திரத்தின் கீழ் *உண்டான்* என்பதை வினையின் ஒரு நேர்வாகக் காட்டியுள்ளனர். இதைத் தொடர்ந்து பவணந்தியார் பின்வருமாறு கூறுகின்றார்:

"செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே" (நன்னூல் 320)

இதுவும் இவ்வுரையாசிரியர்கள் காட்டும் எடுத்துக்காட்டும் வினை என்பது முற்று வினையாகும் என்ற புதிய எண்ணத்தைத் தருகின்றது. நன்னூல் சூத்திரம் வினையின் வரையறை விளக்கத்தையல்லாமல் வினை முற்றுவின் சிறப்பை மட்டும் தான் சுட்டிக்காட்டுகின்றது. *நடந்தான்* என்பது எந்தவித ஐயமுமின்றி வினைதான். 112, 421 என்ற தொல்காப்பியச் சூத்திரங்களின் கீழ் காட்டப்பட்டால் இது நல்ல எடுத்துக்காட்டாகும். *உண்டான்* என்ற எடுத்துக்காட்டில் *உண்* என்பது வினைவேராகும். இதை மட்டும் தான் சொல்வகைப்பாடாகக் கொள்ளவியலும். 'அவற்றுவழி மருங்கின் தோன்றும்' (தொல். 543) என்ற விதிப்படி இறந்தகாலக் குறியீடான *ட்* என்பதும் மாற்றுப்பெயர் பின்னொட்டான *ஆன்* என்பதும் வினையுடன் சேர்க்கப்படும். சேர்க்கப்படும் இரண்டு ஒட்டுக்களும் இடைச்சொல் என்று அழைக்கப்படும்.

"வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையும் காலை காலமொடு தோன்றும்" (தொல். 682)

என்ற சூத்திரத்தின் நுட்பமான ஆய்வு வினையின் சிறப்பான பண்பு காலத்தைக் காட்டும் அதன் திறனாகும் என்று தெளிவுபடுத்துகின்றது. உரையாசிரியர்கள் வினை அதனுள் காலக்

குறிகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டும் என்று பொருள்கோள் செய்யும் போது அவர்கள் தவறான கருத்தை எடுத்தனர். பெயரின் முக்கியமான பண்பு அதன் பெயர்திரிபாக்கம் என்றாலும் யாரும் *அவன், அவள்* போன்றவற்றில் வேற்றுமைக் குறிகள் ஒட்டப்படாதிருப்பதன் காரணமாக அவைகள் பெயர்கள் அல்ல என்று கூறுவதில்லை. மேற்சொன்ன உரையாசிரியாக்களால் மரம் என்பது பெயரின் ஒரு எடுத்துக்காட்டாகக் காட்டப்படுகின்றது. வினைவேரும் காலப் பின்னொட்டும் மாற்றுப்பெயர் குறியும் வினையை ஆக்குமென்றால் தொல்காப்பியர் 'நினையும் காலை காலமொடு தோன்றும்' என்று கூறியுள்ளது போன்று கூறுவது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. மேலும் நாம் காலம் மட்டுமன்றி பாலும் எண்ணும் வினையில் வெளிப்படையாகத் தெரியும் என்று அவர் கூறுவதை எதிர்பார்ப்போம். தொல்காப்பியர் 682-ஆவது சூத்திரத்தை உருவாக்கி உள்ளதன் வழி காலத்தை வெளிப்படுத்துவது வினைவேரின் முக்கியப் பண்பு மற்றும் அதன் உள்ளார்ந்த திறன் ஆகும் என்பதை நமக்குப் புரியவைக்க விரும்புகிறார். இந்தச் சூத்திரத்தின் தொல்காப்பியத்தின் மற்றொரு உரையாசிரியரான நச்சினார்க்கினியார் இந்தச் சூத்திரத்தின் உண்மையான பொருளைப் புரிந்துகொண்டு *உண், தின்* போன்றவற்றை வினையின் கீழ் எடுத்துக்காட்டாகத் தருகின்றார்.

வினையின் பொருண்மை

வினை, செயல் மற்றும் *தொழில்* என்பன பொதுவாக ஒருபொருள்பன்மொழிகளாகக் கருதப்படுகின்றன. ஆனால் நெருங்கிப் பரிசோதித்தால் அவற்றின் பொருள் மற்றும் பயன்பாட்டிற்கு இடையில் பெரிய வேறுபாடு இருப்பதைக் காணலாம். இந்த வேறுபாட்டை தொல்காப்பித்தில் சொல்லதிகாரத்தில் 'வினையியல்' என்றும் பொருளதிகாரத்தில் 'செய்யுளியல்' என்றும் பயன்படுத்தப்படும் வெளிப்பாடுகளுடன் தொடர்புபடுத்தி அறியலாம்; *செய்யுள்* என்பது *செய்* என்ற வேரிலிருந்து வந்ததாகும். *செய்யுள்* ஒரு வினைப்பெயராக 'செய்யப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஒன்று' எனப் பொருள்படும். *செய்வினை, வினைச் செயல்வகை* என்ற கூட்டுச்சொற்களும் இந்த வேறுபாட்டை உறுதிசெய்கின்றன. வினைப்பெயர், தொழில்பெயர் என்பன வேறுபட்ட பொருள்கொண்ட இலக்கணச் சொற்களாகும். முந்தையது முற்றுவினையைப் போன்று வடிவத்தைக் கொண்ட *நடந்தான்* என்ற மூவிடப்பெயரையும் பிந்தையது *நடத்தல்* என்ற வினைப்பெயரையும் குறிப்பிடும். வினை என்பதே சூழல் அடிப்படையில் பல பொருள்களைக் கொண்ட சொல்லாகும். இது 'செய்து இறங்கா வினை' (புறம் 10) என்பதில் ஒரு செயலையும், 'வினையே ஆடவர்க்கு உயிரே' (குறுந்தொகை 135) என்பதில் வேலையையும்

'ஆள் வினை' என்பதில் பொறுப்பேற்பதையும், 'இருள்சேர் இருவினை' (குறள் 5) என்பதில் முற்பிறப்பில் செய்த செயலின் விளைவையும், 'வினை நன்றே' (குறள் 673) என்பதில் போரையும் குறிப்பிடுகின்றது.

வினையின் மூலம்

வினை 'செயல்' ஒரு வினைப்பெயராக 'செய்' எனப் பொருள்படும் வின் என்ற வேரிலிருந்து வந்திருக்கலாம். 'கேள்வி' எனப் பொருள்படும் *வினா* என்ற சொல்லும் அதே வேரிலிருந்து வந்திருக்கலாம். 'வினா உடை வினைச் சொல்' (தொல். 728) அதே வேரிலிருந்து உருவான சொற்களின் சிறப்பான மற்றும் பொதுவான பொருள்களைக் கொண்டிருக்கும்.

வினா என்பதில் *ஆ* என்பது சொல்லின் பொருளை கேள்வி கேட்டல் அல்லது கேள்வி என்ற பொருளுக்குக் கட்டுப்படுத்தும் சிறப்பு இடைச்சொல்லாகும். இதுபோல் வினை என்பதில் *ஐ* என்பது சொல்லின் பொருளை 'செயல்' என்ற பொருளுக்குக் கட்டுப்படுத்தும் சிறப்பு இடைச்சொல்லாகும். இருப்பினும் வினா என்பதை வினையாகவும் பெயராகவும் பயன்படுத்த இயலும், ஆனால் வினை என்பததை பெயராக மட்டும்தான் பயன்படுத்த இயலும்.

2. வினை வேர்களின் இயல்பு

தமிழில் மூன்று வகையான வேர்கள், அதாவது வினைவேர்கள், பெயர்வேர்கள், வினைக்கும் பெயருக்கும் பொதுவான வேர்கள், உள்ளன என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். பொதுவான வேர்களை இரு வகுப்புகளாகப் பிரிக்கலாம். ஒரு குழும வினைகள் பொருண்மையிலும் வடிவத்திலும் ஒன்றாக இருக்கும்; எ.கா. அணி ஒரு வினையாக 'அணிகலன்களால் அலங்கரிப்பது' எனப் பொருள்தரும்; *துணி* ஒரு வினையாக 'துண்டுகளாக வெட்டுதல்' என்பப் பொருள்படும். ஒப்புரு உடைய ஆனால் வேறுபட்ட பொருள்களைக் கொண்ட வேர்கள் இரண்டாவது வகுப்பைச் உருவாக்கும்; எ.கா. *வில்* ஒரு வினையாக 'to sell' என்பதையும் ஒரு பெயராக 'a bow' என்பதையும் *ஓடு* ஒரு வினையாக 'to run' என்பதையும் ஒரு பெயராக ' a tile' என்பதையும் குறிப்பிடும். கால்டுவெல் இந்த துணைவகைப்பாடு இருப்பதை குறிப்பிட்டதாகத் தெரியவில்லை.

பொதுவான வேர்கள்

பொதுவான வேர்கள் இருப்பது தமிழ் இலக்கணத்தாருக்கு தெரியாததல்ல. சுத்த வினை வேர்களான *நட, உண், தின்* போன்றவற்றைப் பெயர்த்திரிபாக்கம் செய்யாது; பெயரை மட்டும் சார்ந்த வேர்கள் காலம் காட்டாது. பெயர் திரிபாக்கத்தையோ வினைத் திரிபாக்கத்தையோ கொண்டிருக்கும் சாத்தியம் இருவகையான பயன்பாட்டுடைய வேர்களின் மீது அமையும். தெளிவைத் தருவதற்காகத் தொல்காப்பியர் வினையின் இயல்பை இருவழியில் விளக்குகின்றார்; அதாவது சூத்திரத்தில் நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் இருக்கும்.

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையும் காலைக் காலமொடு தோன்றும்" (தொல் 682)

பெயரின் பண்பின் அடிப்படையில் *வேற்றுமை கொள்ளாது* என்பதை வினையின் இயல்புக்குக் குறிப்புரையாகக் கூறுவது வெளிப்படையாகப் பொருத்தமற்று இருக்கின்றது. ஆனால் (வினைக்கும் பெயருக்கும்) பொதுவான வேர்கள் இருப்பது இந்தக் கூற்றை தேவையாக்குகின்றது. வினை வடிவத்தில் இது வினைத்திரிபாக்கத்தை ஏற்கும், ஆனால் பெயர்திரிபாக்கத்தை ஏற்காது; பெயர் வடிவத்தில் இது பெயர்திரிபாக்கத்தை ஏற்கும், வினைத் திரிபாக்கத்தை ஏற்காது. பின்னர் வரும் முக்கியக் குறிப்பு தொல்காப்பியரின் கூற்றிலும் வெளிப்படுகின்றது.

"பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா" (தொல் 33)

இவ்வாறு நேர்மறையான மற்றும் எதிர்மறையான இரட்டை விளக்கம் வினை வடிவத்திற்கும் பெயர் வடிவத்திற்கும் தொல்காப்பியரால் சமநிலைப் படுத்தப்படுகின்றது.

பரிசோதனையின் போது பொதுவான வேர்கள் என்று அழைக்கப்படுவன வினைகளின் வேர்கள் என்று தோன்றுகின்றது. வேறுபடுத்த இயலாது என்று கூறப்படுகின்ற பொதுவான வேர்களான *அணி, முறி, சொல்* போன்றவை முதலில் வினைச் செயல்பாட்டைக் குறிப்பிடுகின்றன. அவை அற்றின் இரண்டாம் நிலைப் பொருண்மையில் தான் பெயர்களாக மாறுகின்றன. இரண்டாம்நிலைப் பொருண்மையைச் சொல்லாக்கத்தின் குறியீடு இல்லாமல் குறிப்பிடுவது தமிழ் வேர்களின் தனித்தன்மைகளில் ஒன்றாகும்; அதாவது செயலையும் அதன்

பொருளையும் (object). இது இவ்வகையிலான வினைவேர்களின் இயல்பாகையால் அவை இரண்டாம் வேற்றுமையில் எந்தப் பொருளையும் (object) வேண்டுவதில்லை. *வந்தேன்* என்ற நேர்வில் அதன் எழுவாய் வேற்றுமையாக *நான்* தேவைப்படாதது போல் யாரும் *அணியை அணி* என்றும் *சொல்லைச் சொல்* என்றும் கூறுவதில்லை. இந்தப் பண்புக்கூறை உணர்ந்து தொல்காப்பியர் அவரது விதியைக் கூறியுள்ளார்.

"வளங்கியல் மருங்கில் குன்றுவ குன்றும்" (தொல். 596)

சிவஞானமுனிவர் மற்றும் பிறரின் கருத்துக்களுக்கு மறுப்பு

வினை மற்றும் பெயர் வேர்கள் பற்றி சிவஞானமுனிவர் மற்றும் ஆறுமுக நாவலர் போன்ற உரையாசிரியர்கள் செய்த சில கூற்றுகள் தமிழ் வேர்களின் தனித்தன்மையான பண்பைப் சரியாகப் புரிந்துகொள்ளாமையை வெளிப்படுத்துகின்றன. அவர்கள் வடிவம் வேறுபடாத ஒரு சொல் பொருண்மையில் வேறுபடாது என்றும் பொருண்மையின் வேறுபாடு வடிவ வேறுபாட்டை உட்படுத்தும் என்றும் வாதிட்டனர். அவர்கள் *திரை* 'to ripple', *நுரை* 'to froth', *தளிர்* 'to bud', *பூ* 'to bloom', *காய்* 'to bear fruit', *கனி* 'to ripen' போன்றவை மூலத்தில் வினைவேர்கள் என்று ஒத்துக்கொண்டனர். இந்த வடிவங்கள் தாமாகவே பொருள்களைக் குறிப்பிடும் என்று அவர்கள் உடன்படவில்லை. அவர்கள் அவை –இ என்ற செயலிப் பின்னொட்டைக் கொண்டு முறையே *அலை, நுரை, தளிர், காய், கனி* என்ற பொருள்களைக் குறிப்பிடும் என்று உறுதியாகக் கூறினர். அப்படியானால் ஆக்கப்பட்ட வடிவங்கள் *திரைஇ, நுரைஇ, தளிர்ஈ, பூஈ, காஈ, கனிஈ* என்பனவாகும். அவர்களின் வாதம் தர்க்க அடிப்படையில் சரியானது என்பதை யாரும் மறுக்கவியலாது. பௌல் என்ற ஜெர்மன் மொழி நூலார் பின்வருமாறு கூறுகிறார்: "இலக்கணமும் தர்க்கமும் பொருந்துவதில்லை; ஏனென்றால் மொழியின் உருவாக்கமும் பயன்பாடும் கட்டாயமான தர்க்க ஆய்வு அடிப்படையில் தொடர்வதில்லை; மாறாக சிந்தனையின் குழுமங்களின் இயல்பான மற்றும் பயிற்சியற்ற இயக்கத்தில் ஒவ்வொரு தனிநபரின் இயல்பான அல்லது கிடைக்கப் பெற்ற திறன் அடிப்படையில் கூடுதலாகவோ குறைவாகவோ சட்டங்களின் செயலி தொடரும். உரையாசிரியர்களின் கொள்கை *முள்ளி* மற்றும் *வில்லி* என்ற பெயரிலிருந்து வேறுபட்டவைகளுக்குப் பயன்படுத்தத் தகுந்ததாகும். மிகப் பெரிய வகுப்பான பெயர்களாகப் பயன்படுத்தவியலும் வினைகளின் வேர்களின் எல்லைக்குச் சரியாகப் பொருந்தவில்லை. தொல்காப்பியக் காலத்திலிருந்து இப்போதைய காலம் வரையிலான தமிழ்

இலக்கியத்தில் எங்கும் *திரைஇ, நுரைஇ* என்ற வடிவங்கள் நாம் எதிர்கொள்ளவில்லை. மாறாக சில வடிவங்கள் பழைய இலக்கியங்களில் வினையெச்சங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிவஞானமுனிவரும் அவரைப் பின்பற்றியவர்களும் இவ்விடங்களில் *இ* என்பது வராமை குறித்த கேள்வியைத் தவிர்க்கின்றனர். அவர்கள் இலக்கியத்திலோ பயன்பாட்டிலோ முன்மாதிரி இல்லாத மற்றும் 'இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பல்' (நன். 141) என்ற அடிப்படையினான கொள்கைக்கு எதிராக ஒரு விதியைக் கட்டாயமாகப் புகுத்த விழைகின்றனர். 'இலக்கண விதிகள் வாய்மொழிவடிவாகவோ எழுத்துவடிவாகவோ உள்ள பயன்பாட்டிலிருந்து உருவாகியதாகும். இந்நூற்றாண்டின் முதற் பகுதியைச் சார்ந்த மிகச்சிறந்த தமிழ் அறிஞரான அரசன் சேரனார் இந்த ஏற்றுக்கொள்ளவியலாத கருத்துக்கு எதிராகத் தன் உடன்பாடின்மையை வெளிப்படுத்துகின்றார்; ஆனால் தமிழ் வேர்களின் உள்ளார்ந்த இயல்பை உருப்படுத்தம் செய்யத் தவறிவிட்டார் (அரசன் சண்முகனார், பாயிர விருத்தி பக்கம் 227). வினைவேர்களான *திரை, நுரை* போன்றவை ஆகுபெயர் அடிப்படையில் 'wave', 'froth' என்ற பொருண்மைகளை வெளிப்படுத்துகின்ற என்பது அவரது வாதமாகும். ஆகுபெயரில் 'ஒன்றன் பெயரான் அதற்குஇயை பிறிதை' (நன். 290) என்ற விதியால் தரப்படும் மற்றொரு தொடர்புள்ள பொருண்மையைக் கூற வெளிப்படுத்தப்பட்ட சொல் ஒரு பெயராய் இருக்கவேண்டும். *திரை, நுரை* மற்றும் இவை போன்றவை வினைவேர்களானபடியால் அவருடைய வாதம் ஏற்றுக்கொள்ளவியலாதது.

தொல்காப்பியரின் வகைப்பாடு

சேர்க்கப்பட்ட வடிவாக்கிகளையும் உள்ளடக்கி எல்லா வினைவேர்களையும் மொத்தமாகக் கருத்தில் கொண்டால் தமிழ் வினைவேர்களை மூன்றாகக் காணலாம்: ஓரசை, ஈரசை, மற்றும் மூவசை வினையடிகள்.

> "ஓரெழுத்து ஒருமொழி ஈரெழுத்து ஒருமொழி
> இரண்டு இறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட
> மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே"

இந்தச் சூத்திரம் தமிழில் உள்ள மொத்த வேர்களின் சரியான ஆய்வாகும். மூன்றாவது வகைப்பாட்டைத் தொடர்மொழி என்று கூறுவது சிறப்பானதாகும். தொடர்மொழி என்பது

வாக்கியத்தைக் குறிப்பிடவில்லை; இரண்டு எழுத்திற்கு கூடுதல் உள்ள சொல்லைக் குறிப்பிடுகின்றது. குற்றியலுகரமுள்ள *அன்பு, வரம்பு, அணங்கு* போன்ற சொள்கள் பெரும்பாலும் இவ்வகைப்பாட்டை நிரப்புகின்றன. இம்மொழியில் வினையைப் பொறுத்தவரையில் நான்கிற்கும் மேற்வட்ட எழுத்துக்கள் உள்ள சொற்கள் காணப்படுவதில்லை.

திராவிடமொழிகளின் ஒப்பிலக்கண மொழிநூலின் தந்தையான டாக்டர் காலடுவெல் திராவிட வேர்களை அடுத்தடுத்த வளர்ச்சியின் கவனமான அகற்றலால் நிலையான ஓரசை வேர்களாகக் காணலாம் என்று எண்ணச்செய்கின்றார். நாம் தமிழ் வினைவேர்களில் பெரும்பான்மையானவற்றை ஈரசைகளாகவும் மூவசைகளாகவும் கண்டாலும் இவ்வேர்கள் வருவதற்கான அடிப்படை ஓரசைகளாகும் என்பதை மறக்கலாகாது. இருப்பினும் இம்மூன்று வகை வினைவேர்களும் அன்றாடப் பயன்பாட்டிற்கு இன்றியமையாதனவாதலால் ஒரெழுத்து ஒருமொழி, ஈரெழுத்து ஒருமொழி, தொடர்மொழி தொல்காப்பியரின் வகைப்பாடு வினைவேர்களின் வளர்ச்சியையும் அன்றாடப் பயன்பாட்டையும் விளக்கிநிற்கின்றன.

வினை வேர்களின் சேர்க்கை

இப்போது நாம் பெயர்களுடனோ பிற வடிவங்களுடனோ வினைவேர்களின் சேர்க்கை மற்றும் பயன்பாட்டில் சில வினைவேர்களின் முக்கியத்துவம் பற்றிய ஆய்விற்கு நமது கவனத்தைத் திருப்புவோம்.

1. சில பெயர்கள் வினைவேர்களுடன் முன்னொட்டுகளாக இணைக்கப்பட்டு எல்லாக் காலகட்டங்களிலும் ஒரு பெயர் மற்றும் ஒரு வினை கொண்ட கூட்டுச் சொற்களாகக் காண்கின்றோம். முதலில் சில நேர்வுகள் எடுத்துக்கொள்ளப்பட்டுப் பின்னர் அவற்றின் சிறப்பான கட்டுமானம் விளக்கப்படுகின்றது.

(அ) தலை-கவிழ் 'to hang down ones head'
தலை-குனி 'to hang down ones head'
தலை-கொடு 'to support'
தலை-அசை 'to nod'

(ஆ) கை-கொடு 'to lend a helping hand'

சை-நீட்டு 'to attack'

கை-பார் 'to read the lines of the palm'

கை-ப்-பற்று 'to seize'

கை-ய்-ஆளு 'to employ'

(இ) கண்-வை 'to cast the evil eye'

கண்-ஓடு 'to be sympathetic'

கண்-வளர் 'to sleep'

கண்-போடு 'to cast wistful looks'

கண்-பார் 'to show compassion'

(உ) கால்-கொள் 'to plant'

கால்-ஆட்டு 'to be in affluent position'

கால்-வாங்கு 'to retreat'

கால்-வை 'to enter'

கால்-ஆறு 'to rest form walking'

(ஊ) அடி-கோல் 'to lay foundation'

அடி-பணி 'to surrender'

அடி-ப்-படு 'to become accustomed'

அடி-விழு 'to fall prostrate'

அடி-வை 'to begin'

முன் ஒட்டப்பட்ட பெயர்கள் எல்லாம் *தலை, கை, கண், கால், அடி* போன்ற பல உடல் உறுப்புகளைக் குறிப்பிடுகின்றன என்பது ஆர்வத்திற்குரியதாகும். இப்பெயர்கள் *கவிழ், குனி, கொடு, பார்,* வை போன்ற சாதாரண வினைகளுடன் சேர்ந்து அவற்றின் பொருளை முற்றிலும் மாற்றுகின்றன. *கொடு* என்பது 'to give' என்று பொருள்படும்; ஆனால் இது *தலை, கை* என்பனவற்றை முன்னொட்டாகப் பெறுகையில் விளைகின்ற கூட்டுச்சொற்கள் முறையே 'to undertake the whole business', 'to lend aid' எனப் பொருள் மாறும். *வை* 'to lay' என்பது *கண், கால்* என்பனவற்றால் முன்னொட்டப்படுகையில் முறையே 'to look at wistfully', 'to step' எனப் பொருள்படும். *அசை* என்பது 'to remove' எனப் பொருள்தரும்; ஆனால் *தலை-யசை* என்பது 'to nod in approval' எனப் பொருள்படும். *வளர்* என்பது 'to grow' எனப் பொருள்தரும்; ஆனால் *கண்வளர்* என்பது 'to sleep' எனப் பொருள்படும்.

இப்பொழுது சில முன்னொட்டப்பட்ட பெயர்கள் காணப்படுவதில்லை; இருப்பினும் சாதாரண வினைகளே அவை பொருத்தமான முன்னொட்டுகளுடன் சேர்க்கப்படும் போது வெளிப்படுத்துகின்ற உருவகப்பொருளைத் தரும். இதை எண்ணத் தொடர்பு விதியால் விளக்கவியலும்.

2. சங்க இலக்கியங்களில் கருத்தத்தக்க அளவு வினைப்பெயர்கள் வினை வேர்களுடன் சேரும் நிகழ்வுகளை நாம் எதிர்கொள்வோம். இவ்விரு பகுதிகளில் முதலாவது ஒரு சிறப்புப் பொருளைக் கொண்டிருக்கும்; இரண்டாது ஒது பொதுப் பொருளைக் கொண்டிருக்கும். இரண்டாவது கூறு *தரல், வரல்* என்ற சொற்களுடன் மட்டும் வரம்புடையதாய் இருக்கும். அது மட்டும் தான் வினைத்திரிபாக்கங்களைக் கொண்டிருக்கும். எடுத்துக்காட்டுகள்:

அழி-தரல் 'to become grief'
பெயர்-தரல் 'to returen'
இழி-தரல் 'to despise'
சூழ்-தரல் 'to think out'
அஞ்சு-வரல் 'to fear'
அசை-வரல் 'to move'
துயல்-வரல் 'to swing'
கது-வரல் 'to hasten'

இவ்விரு கூறுகளில், இறுதியில் வருவது ஒழுங்காக வினைத்திரிபாக்கமுறும்; அனால் முதலாவது வருவது பாதிக்கப்படாது. எ.கா. *அழி-தந்தான், அழி-தர, அழி-தந்து, அழ-தரும், அழி-தரின்*. தனி வினை வேருக்கும் கூட்டின் இரண்டாவது அங்கத்தினருக்கும் உள்ள ஒரே வேறுபாடு பிந்தையதை *ஒளிதா, அஞ்சுவா* என்பன போன்று ஏவல் முன்னிலையிட ஒருமையாகவோ பன்மையாகவோ பயன்படுத்த இயலாது என்பதாகும். இடைக்காலத்தில் இந்தத் துணைவினைகள் பயன்படுத்தப்படவில்லை. இதன்காரணமாக முதல் உண்மையான வேர் *அழிந்தான், அழிய, அழிந்து, அழியும், அழியின்* என சீரான வினைத்திரிபாக்கத்தை ஏற்றது. இரண்டாவது கூறு மறைந்தபோது முதல் கூறை பிற எல்லா வினை வேர்களைப் போல் ஏவல் வினைநோக்கில் பயன்படுத்த முடிந்தது. இக்கூட்டுகளை நமது காலத்தில் பயன்படுத்துவது ஒவ்வாதாகும்.

3. சில நேர்வுகளில் நாம் முற்றிலும் இரண்டாவது பகுதியைப் பயன்படுத்துவதை விட்டுவிட இயலும். முதலாவதன் பொருண்மையை வெளிப்படுத்தவும் உச்சரிக்கவும் இரண்டாவது அங்கத்தினர் கட்டாயம் தேவை. *பருவரல்* 'to be perturbed', *அலமரல்* 'to be vexed', *அணவரல்* 'to embrace' என்பன நேர்வுகளாகும். இச்சொற்கள் வினைத்திரிபாக்கத்தில் முந்தையதைப் போன்றதாகும்; ஆனால் அவை இரண்டாவது கூறின் நிரந்தரப் பயன்பாட்டால் முந்தையதிலிருந்து வேறபடும். மேற்சொன்ன எடுத்துக்காட்டில் *வரல்* அல்லது *மரல்* இரண்டாவது கூறாகும் என்பது சர்ச்சைக்குரிய விசயமாகும். ஏ.குமாரசாமி புலவர் வரல் என்பதை இரண்டாவது கூறாகக் கொள்கின்றார். *உலமரல்*, *அலமரல்* என்பனவற்றின் வினை எச்சங்களான *உலமந்து*, *அலமந்து* என்ற சொற்களையும் *தரல்*, *வரல்* என்பனவற்றைத் துணைவினைகளாகப் பயன்படுத்துவதையும் கருத்தில் கொண்டால் நாம் அவர் பக்கம் நிற்கும் நிலை ஏற்படும். *மரல்* என்பது உண்மையாக இரண்டாவது கூறாக இருந்தால் வினை எச்சவடிவம் *உலமந்து* என்றிராமல் *உலமருவி* என்றிருக்க வேண்டும்; *அலமந்து* என்றிராமல் *அலமருவி* என்றிருக்க வேண்டும். *வலம்வரல்* என்ற இணையான நிகழ்வைக் காட்டி *ம்* முன்னர் *வ்* மறைந்துவிடும் என்று மறுக்கலாம். *அலம்-மரல்* எனப் பிரிப்பதற்குச் சாதகமாக ஒருவர் இறுதி *ம்* கெடும் *காமம்+மரு* அல்லது *காம்+மரு* என்ற எடுத்துக்காட்டைக் காட்டலாம். இருப்பினும் *வ்* என்பது நிரந்தரப் பயன்பாட்டின் காரணமாக ஓரினமாற்றமடைந்து பின்னர் மறைந்து விட்டது என்ற கருத்தின் அடிப்படையில் *வரல்* என்பதை இரண்டாவது பகுதியாக் கொள்ளும் கருத்து இங்கு எடுக்கப்பட்டுள்ளது.

4. பின்வரும் எடுத்துக்காட்டுகளில் காணப்படுவதுபோல் ஒரு தனிப்பட்ட சேர்க்கையும் காணப்படுகின்றது.

கெட்டீ மறந்தீ நின்றீ காட்டீ சென்றீ களந்தீ எள்ளீ

இங்கு *இ* என்ற வினைவேர் இறந்தகால வினை எச்சத்துடன் ஒட்டப்பட்டுள்ளது. இச்சேர்க்கை *இளிதரல்*, *உலமரல்* என்ற தனிப்பட்ட வடிவங்களிலிருந்து வேறுபடுகின்றது. கேட்டுமின், மறந்தீதோய், காட்டீ யாயின் போன்று ஈ என்ற இரண்டாவது கூறுதான் ஒழுங்காகத் திரிபாக்கமுறும். எள்ளீ, காட்டீ போன்ற நேர்வுகளில் வினையெச்சத்தின் குறியீடான இ என்பது ஈ என்ற நெடில் முன் மறைந்துவிடுகின்றது. எனவே இவற்றை *எள்+ஈ*, *காட்டு+ஈ* எனப் பிரிப்பது

தவறாகும். ஆனால் *செல்* என்பது 'to go' என்றும் *சென்றீ* என்பது 'please go' எனப் பொருள்படும் (ஒப்பிடு *போனி* தெலுங்கில் 'let him go' எனப்பொருள்படும்). பின்வரும் சூத்திரத்திலிருந்து தொல்காப்பியர் இந்த தனித்தன்மையான சேர்க்கைக்கு ஆதரவுகாட்டியுள்ளார் என்று தெரிகின்றது.

"முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அன்னிலை மரபின் மெய்யூர்ந்து வருமே" (தொல்.934)

5. துணை வினைகள்

மேலே காட்டியுள்ளது போல் *தா, வா, ஈ* என்ற சொற்கள் துணைவினைகளாகத் தங்கள் முக்கியத்துவத்தை இழந்து வினைகளின் வேறுபட்ட வடிவங்களுடன் ஒட்டப்படுகின்றன. இம்மூன்று சொற்களில் *தா, வா* என்பனவைகளே *தந்தீயாயாயின், வந்தீயாயாயின்* என *ஈ* என்பதை அவற்றின் ஒட்டாக ஏற்பதுண்டு என்பதால் *ஈ* மட்டும் முதன் முதலில் துணைவினை என்ற பங்களிப்பைக் காட்டும் முதல் வினை வேராகக் கணக்கிடப்படுகின்றது. இந்தத் துணைநிலையை உறுதிசெய்ய பல காரணங்கள் இருக்கின்றன. *ஈ* என்பது துணைவினையாகப் பயன்படுத்தப்படும் போது ஏவலின் முன்னிலை இட ஒருமையையும் உள்ளடக்கிய இலக்கண வடிவங்களாக பயன்படுத்தப்படும் பலன் கொண்டுள்ளது என்ற உண்மை, *ஈ* ஒட்டாக எப்போதும் நிற்கின்றது எனக் காட்டும் ஒரு நேர்வு இல்லாமை, இலக்கணப் புலத்தில் நெடில் *ஈ* அல்லது அதன் குறில் *இ* என்பன செய்யும் பல செயல்பாடுகள் இவை எல்லாம் இதன் தொன்மையைக் நிரூபிக்கின்றன. எனவே *ஈ* தமிழ் வினைகளின் பட்டியலில் முதலிடம் பெறவேண்டும் என நம்பவியலும். *ஈ* என்பது உச்சரிக் எளிதான உயிராகவும் அதன் பொருண்மை ஆரம்பமானதாகவும் இருப்பதால் இது தொடக்கவாக்கத்தில் பழமையானது என்று கருதக் காரணம் உள்ளது.

எழுந்திரு, நடந்திரு என இருந்து, இடு என்பன இடைக்காலத்திலிருந்தே அதிக பயன்பாட்டிலிருந்த துணைவினைகளாகும். அவை தற்காலத்தில் ஈ ன்பதை பெரும்பாலான அளவில் இடப்பெயர்த்துள்ளன.

6. தமிழில் வினை வேர்கள் நிறைவுற்றதையோ வேகத்தையோ குறிப்பிட வேண்டிப் பெரும்பாலும் இரு தடவையும் சில நேரங்களில் மூன்று தடவையும் திரும்பக்கூறப்பட்டு வரும். எ.கா.

தேடு தேடத் தேடினேன் 'I searched throughly'

போடு போடெனப் போட்டேன் 'I went ahead unhesitatingly'

தொல்காப்பியர் சில சூழல்களில் இத்திருப்பிக்கூறலுக்கு ஒரு விதியை உருவாக்கியுள்ளதாகத் தெரிகின்றது.

"விரைசொல் அடுக்கே முன்று வரம்பாகும்" (தொல். 906)

7. புதிய வகைப்பாடு

வினைவேர்களின் முக்கியத்துவத்தின் ஆய்வு முன்று குழுக்களில் அவற்றை வைக்க நமைக் கொண்டுசெல்கின்றது. (1) உயர்திணை உயிர்களை மட்டும் சார்ந்த வினைவேர்கள், (2) அ.ஃறிணை உயிர்களை மட்டும் சார்ந்த வினைவேர்கள், (3) இரு குழுக்களையும் சார்ந்த வினைவேர்கள். கற்றல், படித்தல், எழுதல், ஆராய்தல் அவற்றை முதல் குழுவில் சேர்க்கும். பூத்தல், காய்த்தல், கனிதல் என்பன இரண்டாவது குழுவைச் சாரும். இக்குழுவின் பல அங்கத்தினர்கள் ஆகுபெயர் வழியாக முதல் குழுவிற்கு இடமாற்றம் பெறும். இற, பிற, உண், உறங்கு என்பன இரண்டிற்கும் பொதுவானவை. இம்முன்று வகுப்புகளும் பல துணைவகைப்பாடுகளாகப் பாகுபடுத்தபப்படலாம்; இது இங்கு தேவையில்லை. இக்குழுக்கள் எவ்வாறு பாகுபடுத்தப்படுகின்றன என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் கூறினால் போதுமானது.

பொதுவான குழுவைச் சாரும் *ஈன்* என்ற வினை வேரை எடுத்துக்கொள்வோம். இது அதற்கு மட்டும்வேண்டி பெண்பாலைப் பயன்படுத்துவதைக் கொண்டிருக்கும்.

'ஈன்ற பொழுதில் பெரிது உவக்கும்' (குறள். 69)

'ஈன்று இளைப்பட்ட கொடுவைப் பேடை' (அகம். 3)

தமிழ் இலக்கியத்தில் *ஈன்றான்* என்ற ஒரு நேர்வைக் கூட காணமுடிவதில்லை. ஆனால் *பெறு* என்பது இருபாலருக்கும் பொதுவான வேராகும். காதல் செய்யுளின் ஐந்து தலைப்புகளில்

ஒன்றான பிரிதல் 'தலைவன் தலைவியைப் பிரிந்தான்' என்பது போன்று கணவனுடன் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. 'தலைவி பிரிந்தாள்' என்பது தமிழ்ச் செவிக்குக் கடுமையாக இருக்கும். தொல்காப்பியர் தமது சூத்திரத்தில் இவ்வகையிலான வகைப்பாட்டிற்குக் குறிப்பு தருகின்றார்.

"பெயரினும் தொழிலினும் பிரிபவை யெல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன" (தொல். 533)

இத்திருத்தங்கள் இக்காலத்தில் மறைந்து விட்டன. இப்புலத்தின் நுட்பமான ஆய்வு ஆர்வமூட்டுவதாகவும் அறிவுறுத்துகின்றதாகவும் இருக்கும்.

8. மரபுவழக்குசார் வேர்கள்

தொல்காப்பியர் சில வினைகளின் பயன்பாடு பற்றி ஆய்ந்துள்ளார். அவர் *தா, வா* என்பன பெறுபவர் தன்மையிடத்தையோ முன்னிலையிடத்தையோ சார்ந்திருந்தால் மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும் *செல், கொடு* என்பன பெறுபர் படாக்கை இடத்தைச் சார்ந்திருந்தால் மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும் கூறுகிறார். இதிலிருந்து வினைவேர்கள் கட்டுமானத்தின் உதவியின்றி சில குறிப்பிட்ட மூவிடப்பெயர்களால் பாகுபடுத்தப்படுகின்றன என்று தெரிகின்றது. *அவன் பொருளைக் கொடுத்தான்* 'he gave (him) a thing' என்ற வாக்கியத்தில் நான்காம் வேற்றுமை புரிந்துகொள்ளப்படுகின்றது; இருப்பினும் நாம் அவ்விடத்தில் சரியாக *அவனுக்கு* என்ற சொல்லைத் தரவியலும். *அவன் எனக்குத் தந்தான்* 'he paid to me', *அவன் என்பால் வந்தான்* 'he came to me' என்ற வாக்கியங்கள் பழங்கால அறிஞர்களுக்கு மரபுவழக்குத்தன்மையற்றதாகப் பட்டிருக்கலாம். *அவன் தந்தான்* என்பது 'he gave it to me' எனவும் *அவன் வந்தான்* என்பது 'he came to me' என்றும் பொருள்படும். தமிழ் மரபு இவ்விடங்களில் நான்காம் வேற்றுமையையோ ஏழாம் வேற்றுமையையோ வேண்டாது.

9. தொல்காப்பியர் தற்காலத்தில் ஒருபொருள்பன்மொழிகளாகக் கருதப்படும் *ஈ, தா, கொடு* என்பவற்றின் பொருண்மைகளைத் தெளிவாக்குகின்றார். இம்மூன்று சொற்களும் இரப்பதற்குப் பயன்படுத்தப்படும்; இருப்பினும் அவை இரப்பவரின் நிலைமையைச் சுட்டும். *ஈ* என்பது 'கீழ்நிலையில் இருப்பவருக்குக் கொடு' என்று பொருள்படும்; *தா* என்பது 'ஒத்தநிலையில்

இருப்பவருக்குக் கொடு' என்று பொருள்படும்; *கொடு* என்பது 'மேல்நிலையில் இருப்பவருக்குக் கொடு' எனப் பொருள்படும்.

வினைவேர்களின் திராவிடமொழி அமைப்மைப் பற்றி எழுதுகின்ற மொழிநூலார்கள் வினையின் பக்குவமற்ற தலைப்புப்பொருள் ஏவல் முன்னிலை ஒருமையை வெளிப்படுத்துவதாகும் என்று ஒட்டுமொத்தமாக உடன்படுகின்றனர். எல்லா உரையாசிரியர்களும் இக்கருத்துடன் முரண்பட்டு வேறுபட்ட விளக்கங்களைத் தருகின்றனர்.

3. வினை வேர்களில் மாற்றம்

நன்னூல் சூத்திரத்தின் (139) பொருள்கோள்

டாக்டர் கால்டுவெல் 'வேர்கள்' என்ற பகுதியில் பெரும்பாலும் பெயர்களிலிருந்து எடுத்துக்காட்டுகள் தந்து இப்பொருண்மை பற்றி சுருக்கமாகக் கூறுகின்றார். பின்னொட்டுகள் சேர்க்கப்படுகையில் வேர்கள் பெயர்களாகவோ வினைகளாகவோ அடையும் மற்றங்கள் பற்றி தொல்காப்பியர் எதுவும் கூறவில்லை. ஒரு சொல்லின் கலவைத்தன்மையான இயல்பு பற்றி ஆய விரும்பும் பவணந்தியார் வினைவேரின் மாற்றங்களுக்கு ஆதரவுகாட்டியுள்ளார் மற்றும் பின்வரும் சூத்திரத்தில் மாற்றங்களை அனுமதித்து ஒரு விதியைத் தருகின்றார்.

"விளம்பிய பகுதி வேறாதலும் விதியே" (நன்னூல் 139)

நட, வா போன்ற வேர்களின் பொருள் மாறும் மற்றும் மாற்றம் விதியடிப்படையிலானதாகும் என்பது இவ்விதியின் பொருளாகும். இப்பொருள்கோள் நன்னூலின் முதல் உரையாசிரியரான மைலைநாதரால் தரப்படுகின்றது. இச்சூத்திரம் வேர்களில் விளையும் மாற்றங்களையும் உட்கருத்தாகக் கூறுகின்றது. நன்னூலின் ஆசிரியர் பின்வரும் சூத்திரத்தில் பண்பைக் குறிக்கும் கூட்டல்லாச் சொற்களும் பின்னொட்டுகளும் மாற்றங்களுக்கு உள்ளாவதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

'ஈறு போதல் இடையுகரம் இய்யாதல்' (நன். 136)
'ஆ ஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே (நன். 353)

நன்னூலில் கூறியுள்ள ஒரு விதியின் அடிப்படையில் சொற்கள் 23 ஈறுகளில் (11 உயிர்கள், 11 மெய்கள் மற்றும் ஒரு குற்று உகரம்) முடிவுறுகின்றன. தெளிவுக்காகவும் எளிமைக்காகவும் ஒவ்வொரு ஈறுகளும் நன்னூலில் தந்துள்ள வரிசைப்படி தனித்தனியாக விவாதிக்கப்படும்.

உயிர் ஈறுகள்:

1.	நட	நடி	நடு
2.	இர	இரி	இரு
3.	இழ	இழி	இழு
4.	உழ	உழி	உழு
5.	மற	மறி	மறு

இந்த எடுத்துக்காட்டுகள் எவ்வாறு அ, இ, உ என்ற முதன்மை உயிர்கள் முன்வரும் மெய்களை மாற்றாமல் பொருண்மைகளின் சிறப்பாக்கத்தில் முக்கிய பங்களிப்பு செய்கின்றது என்பதைக் காட்டுகின்றன. ஒரே கரு அல்லது வேரடிகள், *ட், ர், ழ், ற்* என்ற மைய மெய்கள், ஒரே இனச் சிறப்பாக்கம் போன்ற அவற்றின் பொதுவான வைத்திருப்பு காரணமாக அவற்றின் முழுத் தொடர்ச்சிகளும் உட்டையான உறவு கொண்டிருக்கலாம்.

1. அ ஈறு:

இவ்வீற்றின் வேர்கள் விதிவிலக்கின்றி ஈரசை கொண்டவை.

நட 'to walk': இதன் செயப்படுபொருள் குன்றா வினை சிலசமயங்களில் நடாத்து என்பதற்குப் பதிலாக நடத்து என்று மாறும் (ஒப்பிடுக: *யானா நடாத்துகிறேன்* (காரிகை).

சும 'to bear': இது எதிர்மறை வினை எச்சத்தில் *சுமவாது* 'without purpose' என்பதற்குப் பதிலாக பேச்சுவழக்கில் *சும்மா* என்று மாறும்.

வினைப்பெயர்: சில வினைகள் பின்வருமாறு அவற்றின் வினைப் பெயர்களை ஆக்கும்; *நடை, சுமை, பறை, வலை*, போன்றன.

வினை மற்றும் பெயர் எச்சங்கள்: பழைய இலக்கியங்களில் இவ்வகையிலான வேர்கள் *நடை, நடைஇய, கடை மற்றும் கடைஇய* என்ற வடிவங்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்கலாம். அதாவது, வினைப் பெயர்களின் வடிவங்கள் வினையெச்சங்கள் மற்றும் பெயரெச்சங்கள் உருவாக்கப்படுகின்ற அடிகளாகும்.

2. ஆ ஈறு

இவ்வீற்றுச் சொற்களில் பெரும்பான்மையானவை ஓரசைச் சொற்களாகும். அங்கா 'to open the mouth' மற்றும் அண்ணா 'to gape' போன்ற மிகச்சில சொற்களும் காணப்படுகின்றன.

சா 'to die': இது *செத்தான்* போன்ற இறந்தகாலத்தில் செ என மாறும்.
யா 'to bind': சங்காலத்திற்குப் பின் இவ்வேர் அதன் தொடக்க மெய்யை இழந்து *ஆ* 'to become' என்பதற்குச் சமமாக யாக்கை>ஆக்கை என மாறியுள்ளது.
வா மற்றும் *தா* 'to jump over': *தா* என்பதற்கு 'to spread' என்ற பொருளும் உண்டு. இவ்விரு சொற்கள் தான் இவ்வீற்றைத் தொடக்கத்திலும் உண்மையாகவும் கொண்டிருந்தது. இச்சொற்களின் இலக்கண வடிவங்கள் முறையே வரு மற்றும் தரு என்பதன் தவறான வடிவுகளான *வா* 'to come' மற்றும் *தா* 'to give' என்பனவற்றிலிருந்து வேறுபட்டது.
கொணா 'to bring': இது *கொணர்* என்று மாறுகின்றது என்று ஆறுமுக நாவலர் கூறுகிறார்.

3. இ ஈறு

வினைப்பெயர் - பணி என்பது பாணி என்று மாறும் துணி > தூணி; மற்றும் குனி>கூன்.

4. ஈ ஈறு

இவ்வீறு ஒரு கூற்றையும் ஏற்காது.

5. உ ஈறு

(அ) தொடக்க உயிரின் நீட்சி வினைப் பெயராக மாறுதல்:

கெடு என்பது *கேடு* என்று மாறும்; படு > பாடு; மற்றும் சுடு > சூடு.

(ஆ) மேற்கண்ட நோக்கத்திற்காக உ என்பது *ஐ* ஆக மாறுதல்:

தகு என்பது *தகை* என மாறும்; அறு > அறை; உடு > உடை.

(இ) தொடக்க உயிரை நீட்டுதல் மற்றும் இறுதியை மாற்றுதல்:

விடு என்பது *வீடு* எனவும் *விடை* எனவும் மாறும். *இறு, ஈறு, இறை*; மற்றும் *உறு, ஊறு, உறை*.

(ஈ) இறுதி உ என்பதற்கு ஈடாக தொடக்க உயிரின் நீட்சி:

விழு > வீழ்; எழு > ஏழ்.

(உ) இறந்த காலத்தில் மெய்களின் இரட்டிப்பு:

தழு > தழூ; வெரு > வேரு; குழு > குழூ

(ஊ) வினைப்பெயரிலிருந்து இறந்த கால வடிவத்தின் ஆக்கம்:

நகை – நகைத்தேன்; பகை – பகைத்தேன்; முயற்சி – முயற்சித்தேன்.

(எ) இசை இசைவுக்காக இறுதிக்கு முன் வரும் உயிரின் நீட்சி:

பர – பராவு; விரவு -விராவு

(ஐ) *வரு* மற்றும் *தரு*: இது இச்சொற்களின் முல இறுதியாகையால் இத்தலைப்பில் காட்டப்பட்டுள்ளது. இச்சொற்கள் ஏவல் மற்றும் இறந்தகாலம் தவிர பிற எல்லா இலக்கண வெளிப்பாட்டிலும் *ர்* என்பதைத் தக்கவைத்துள்ளன.

6. ஊ ஈறு

ஒரு சில வினைகள் தாம் இவ்வீற்றை எடுக்கின்றன. கூ சில சமயங்களில் பிற சொற்களுடன் இணைந்து *அறைகூ* 'to challenge' மற்றும் *இனைகூ* 'to cry' போன்ற கூட்டுசொற்களை உருவாக்குகின்றன.

7. ஏ ஈறு:

வே 'to boil' அதன் இறந்தகாலத்தில் *வெ* என மாறும். இது இதன் நெட்டுயிரை பிற எல்லா தொடர்புகளிலும் தக்கவைக்கின்றது. இச்சொல்லின் நெட்டுயிர் குறித்து ஐயம் உள்ளது.

8. ஐ ஈறு

(அ) ஐ என்பது *கட்கும், தட்கும், வித்தும்* போன்ற அதன் சில இலக்கணத் தொடர்புகளில் முழுவதும் மறைந்து விடுகின்றது. இவற்றின் வேர்கள் முறையே *களை, தளை, விதை* என்பனவாகும்.

(ஆ) இது சிலநேரங்களில் அசாதாரண மாற்றத்திற்குள்ளாகும்; *கை* 'to be bitter' *கச* என்று மாறும். *வை* 'to abuse' *வசவு* அல்லது *வசை* என்று மாறும்.

(இ) இது பேச்சு வழக்கில் *அ* என்பதாக மாறும் போக்கைக் காட்டுகிறது.

9. ஒ ஈறு

நொ 'to suffer' என்பதற்கு மட்டும் இந்த ஈறு இருக்கின்றது. இது இறந்தகாலம் தவிர பிற வடிவங்களில் நீட்சிக்குள்ளாகும்.

10. ஓ ஈறு

போ 'வடி படி' என்பது *போகு* என்பதன் மென்மையாக்கப்பட்ட வடிவமாகும். இதன் மூல வடிவம் *ஆகு* என்பதுடன் சேர்த்து விளக்கப்படும். இது தொல்காப்பியர் காலத்தில் ஒரு வினையாக இல்லை என்றும் இதன் பொருளும் இக்காலத்திலிருந்து வேறுபட்டிருந்தது என்றும் நினைவுகூறப்பட வேண்டும்.

11. ஔ ஈறு

வௌ மற்றும் *கௌ* 'seize' என்ற இரு சொற்கள் தான் இவ்வீற்றைக் கொண்டிருக்கின்றன. அவை சில சமயங்களில் வவ் மற்றும் கவ் என்று எழுதப்படவோ உச்சரிக்ப்படவோ செய்யப்படுகின்றன. நன்னூல் ஆசிரியர் கூட சூத்திரம் 137-இல் இவ்வாறு எழுதுகின்றார்: 'தேய் பார் செல் வவ்' . எனவே இவ்வீறு நாளடைவில் இல்லாமல் போகின்றது.

வேர் உயிர்களில் காணப்படுகிற ஒரு தனிப்பட்ட மாற்றம்:

'to divide' பகு (அ+உ) பா என மாறுகிறது.
'to spare' மிகு (இ+உ) மி என மாறுகிறது.
'to enter' புகு (உ+உ) போ என மாறுகிறது.

